05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# முதலாம் படிவ மாணவர்களிடையே உரக்க வாசிக்கும் திறனை ‘எட்கர் டேல் அனுபவக் கூம்பு’ கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல்.

# MENINGKATKAN KEMAHIRAN MEMBACA LANTANG DALAM KALANGAN PELAJAR TINGKATAN 1 DENGAN MENGGUNAKAN 'EDGAR DALE'S CONE OF EXPERIENCE'

ஷரண்யா த/பெ அரிகிரிஷ்ணன்

SHARRANYA A/P ARIKRISHNAN

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2025

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# முதலாம் படிவ மாணவர்களிடையே உரக்க வாசிக்கும் திறனை ‘எட்கர் டேல் அனுபவக் கூம்பு’ கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல்.

# MENINGKATKAN KEMAHIRAN MEMBACA LANTANG DALAM KALANGAN PELAJAR TINGKATAN 1 DENGAN MENGGUNAKAN 'EDGAR DALE'S CONE OF EXPERIENCE'

ஷரண்யா த/பெ அரிகிரிஷ்ணன்

SHARRANYA A/P ARIKRISHNAN

இந்த ஆய்வு தமிழ்மொழிக் கல்வியியலில் இளங்கலைப் பட்டத்தைப் பெருவதற்காகச் சமர்பிக்கப்பட்டது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun PustakaTBainun ptbupsi

LATIHAN ILMIAH INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SEBAHAGIAN SYARAT UNTUK MEMPEROLEHI IJAZAH SARJANA MUDA PENDIDIKAN (BAHASA TAMIL) DENGAN KEPUJIANN

தமிழ்ப்பிரிவு, நவீன மொழித்துறை

மொழி & தொடர்பியல் புலம்

சுல்தான் இட்ரீஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

PROGRAM BAHASA TAMIL, JABATAN BAHASA MODEN

FAKULTI BAHASA DAN KOMUNIKASI

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2025

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**படைப்புரிமை உறுதிமொழி**

**PERAKUAN KEASLIAN PENULISAN**

**இந்த உறுதிமொழி ..02.02.2025.....அன்று வழங்கப்பட்டது.**
**Perakuan ini telah dibuat pada seperti tarikh di atas,**

I. மாணவர் உறுதிமொழி (Perakuan Pelajar) :

தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப் பட்டத்திற்காக 'முதலாம் படிவ மாணவர்களிடையே உரக்க வாசிக்கும் திறனை 'எட்கர் டேல் அனுபவக் கூம்பு' கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல்' எனும் தலைப்பிலான இந்த ஆய்வேடு, என்னுடைய சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என மொழியும் தொடர்பும் புலத்தின் மாணவனாகிய நான், ஷரண்யா த/பெ அரிகிரிஸ்ணன் (D20211100686) உறுதிமொழி வழங்குகின்றேன். இந்த ஆய்வில், பதிப்புரிமையுடைய படைப்புகள் யாவும் அனுமதி பெறப்பட்டு, அவற்றின் மூலங்களைக் குறிப்பிட்டதோடு, துணைபுரிந்த அனைத்து மேற்கோள்களும் துணைநூற்பட்டியலில் முறையாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளன.

Saya, **SHARRANYA A/P ARIKRISHNAN (D20211100686)** merupakan pelajar Fakulti Bahasa dan Komunikasi dengan ini mengaku bahawa projek penyelidikan yang bertajuk **MENINGKATKAN KEMAHIRAN MEMBACA LANTANG DALAM KALANGAN PELAJAR TINGKATAN 1 DENGAN MENGGUNAKAN'EDGAR DALE'S CONE OF EXPERIENCE'** adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan menggunakan mana-mana hasil kerja yang mengandungi hak cipta bagi tujuan rujukan dalam kajian ini dan segala rujukan yang digunakan juga telah ditulis mengikut garis panduan yang tepat. Apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

.........*A.SHARRANYA*..........

( மாணவர் கையொப்பம் /Tandatangan Pelajar )

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ii. நெறியாளர் உறுதிமொழி (Perakuan Penyelia):

‘முதலாம் படிவ மாணவர்களிடையே உரக்க வாசிக்கும் திறனை ‘எட்கர் டேல் அனுபவக் கூம்பு’ கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல்’ என்ற தலைப்பிலான இந்த ஆய்வேடு, ஷரண்யா த/பெ அரிகிரிஸ்ணன் (D20211100686) என்ற மாணவனின் சிறந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என ஆய்வு நெறியாளராகிய நான், முனைவர் பிராங்க்ளின் தம்பி ஜோஸ் உறுதிமொழி வழங்குகின்றேன். இந்த ஆய்வேடு தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப்பட்டத்தைக் பெறுவதற்கான ஒரு பகுதியை நிறைவுசெய்ய மொழியும் தொடர்பும் புலத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

Saya, PROFESOR FRANKLIN THAMBI JOSE dengan ini mengesahkan bahawa hasil kerja SHARRANYA A/P ARIKRISHNAN yang MENINGKATKAN KEMAHIRAN MEMBACA LANTANG DALAM KALANGAN PELAJAR TINGKATAN 1 DENGAN MENGGUNAKAN'EDGAR DALE'S CONE OF EXPERIENCE' dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada Fakulti Bahasa dan Komunikasi bagi memenuhi sebahagian syarat untuk memperoleh Ijazah Sarjana Muda Pendidikan (Bahasa Tamil) dengan kepujian.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

…02/02/2025……                                        ……………………………….

நாள் / Tarikh                                        நெறியாளர் கையொப்பம்/

Tandatangan Penyelia

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## நன்றியுரை

இவ்வாய்வினைத் தங்கு தடையின்றிச் சிறப்புடன் உருவாக்க எனக்கு அருள் புரிந்த இறைவனை வணங்குகின்றேன். இவ்வாய்வினை மேற்கொள்ள அனுமதியளித்த சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகத் தமிழ்மொழிப் பிரிவுக்கு மனமார்ந்த நன்றி. இவ்வாய்வு சிறந்த முறையில் ஆக்கம் பெறவும் திட்டமிட்டப்படி செய்து முடிக்கவும், வழிகாட்டி எம்மைக் கொண்டு வந்த முனைவர் பிராங்க்ளின் தம்பி ஜோஸ் அவர்களுக்கு என் நன்றியைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நான் துவண்டு விழும் பொழுது என் மனதிற்குத் தைரியத்தையும் மனவலிமையையும் ஊட்டிய என் அம்மா அப்பா அவர்களுக்கும், மற்றும் என் நண்பர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாய்வுக்குத் தரவுகளைத் திரட்ட உறுதுணையாக இருந்த கெடா மாவட்டத்தில் அமைந்துள்ள இடைநிலைப்பள்ளி ஆசிரியர்கள் அவர்களுக்கும் மாணவர்களுக்கும் இவ்வேளையில் நன்றி கூறிக்கொள்கிறேன். எனக்கு உதவி புரிந்த தோழர் தோழிகளுக்கு நன்றி செலுத்துகிறேன். நான் இவ்வாய்வை நன்முறையில் செய்து முடிக்க பல வழிகளில் உதவிகளைப் புரிந்த அனைவருக்கும் இத்தருணத்தில் உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் நன்றி, வணக்கம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## ஆய்வுச்சாரம்

இடைநிலைப்பள்ளிப் படிவம் ஒன்று மாணவர்கள் உரக்க வாசிப்புத் திறனில் எதிர்நோக்கும் சிக்கலைக் கண்டறிந்து, 'முதலாம் படிவ மாணவர்களிடையே உரக்க வாசிக்கும் திறனை 'எட்கர் டேல் அனுபவக் கூம்பு' கோட்பாட்டின் வழி மேம்படுத்துதலே' இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வில் அளவுசார் மற்றும் பண்புசார் முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வாளர் கெடா மாநிலத்தில் உள்ள கூலிம் மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய வகை இடைநிலைப்பள்ளி ஒன்றை ஆய்வுத் தளமாகத் தேர்ந்தெடுத்துள்ளார். இந்த ஆய்விற்கு படிவம் ஒன்றாம் பயிலும் தமிழ் மாணவர்களை ஆய்வு மாதிரியாகக் கொண்டு இவ்வாய்வினை மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வில் உற்றுநோக்குதல், மதிப்பீட்டுத்தாள், முன்னறித் தேர்வு, பின்னறித் தேர்வு ஆகிய முறைகள் தரவுகளைத் திரட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.. முன்னறித் தேர்வில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்கள் அனைவரும் சிறந்த அடைவுநிலையை அடையவில்லை. ஆய்வாளர் நடவடிக்கைகளை மேற்கொண்டப் பிறகு நடத்தப்பட்டப் பின்னறித் தேர்வில் அனைத்து மாணவர்களும் மிகவும் சிறந்த அடைவுநிலையை அடைந்தனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# ABSTRAK

Kajian ini bertujuan untuk mengenal pasti masalah yang dihadapi oleh pelajar Tingkatan 1 di sekolah menengah dalam kemahiran membaca lantang dan meningkatkan kemahiran tersebut melalui pendekatan teori ‘Edgar Dale’s Cone of Experience’. Kajian ini menggunakan kaedah kuantitatif dan kualitatif. Penyelidik telah memilih sebuah Sekolah Jenis Kebangsaan Menengah yang terletak di daerah Kulim, negeri Kedah, sebagai lokasi kajian. Sampel kajian terdiri daripada pelajar Tingkatan 1 berbangsa Tamil di sekolah tersebut. Dalam kajian ini, kaedah pemerhatian, lembaran penilaian, ujian praujian, dan ujian pascaujian telah digunakan untuk mengumpul data.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

Hasil daripada ujian praujian menunjukkan bahawa semua pelajar yang terlibat dalam kajian tidak mencapai tahap pencapaian yang memuaskan. Namun, selepas tindakan yang dijalankan oleh penyelidik, keputusan ujian pascaujian menunjukkan bahawa semua pelajar mencapai tahap pencapaian yang sangat baik.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பொருளடக்கம்

படைப்புரிமை உறுதிமொழி I

நன்றியுரை III

ஆய்வுச் சாரம் IV

ABSTRAK V

அட்டவணைப் பட்டியல் XI

குறிவரைவுப் பட்டியல் XII

வரைபடப் பட்டியல் XIII

இயல் 1 1

அறிமுகம் 1

1.1 முன்னுரை 1-2

1.2 ஆய்வுப் பின்னணி 2-8

1.3 ஆய்வுச் சிக்கல் 8-10

1.4 ஆய்வு நோக்கம் 10

1.5 ஆய்வு வினா 11

1.6 ஆய்வு நன்மைகள் 11-13

1.7 ஆய்வு எல்லை 13

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


1.8 ஆய்வுச் சான்றாதாரங்கள் 14

1.8.1 முதன்மைச் சான்றாதாரங்கள் 14

1.8.2 துணைமைச் சான்றாதாரங்கள் 15

1.9 கலைச்சொல் விளக்கம் 15

1.9.1. உரக்க வாசிப்பு 15

1.9.2. எட்கர் டேல் அனுபவக் கூம்பு 16

1.10. தொகுப்புரை 17

இயல் 2 18

ஆய்வு மீள்நோக்கு 18

2.1 முன்னுரை 18

2.2 வாசிப்புத் திறன் சார்ந்த ஆய்வுகள் 18-21

2.3 உரக்க வாசிப்பு சார்ந்த ஆய்வுகள் 21-24

2.4 எட்கர் டேல் அனுபவக் கூம்பு சார்ந்த ஆய்வுகள் 24-30

2.5 தொகுப்புரை 30

இயல் 3 31

ஆய்வு நெறிமுறை 31

3.1 முன்னுரை 31

3.2 ஆய்வு வடிவமைப்பு 31-35

3.3 ஆய்வுக் கட்டமைப்பு 36


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.4 ஆய்வு அணுகுமுறை 37

3.5 ஆய்வுக்கு உட்படுத்துப்பட்டோர் 38

3.6 ஆய்வு கருவி 38

3.7 தரவு சேகரிப்பு முறை 39-40

3.8 தரவுப் பகுப்பாய்வு முறை 40

3.8.1 முன்னறித் தேர்வு 41

3.8.2 மதிப்பீட்டுத்தாள் 41

3.8.3 பின்னறித் தேர்வு 42

3.8.4 நடவடிக்கை 42- 45

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.8.5 உற்றுநோக்கல் 45

3.9 ஆய்வுக் கோட்பாடு 46-51

3.9.1 ஆய்வுக் கோட்பாட்டுக் கட்டமைப்பு 52

3.9.2 ஆய்வு நடைமுறை 53

3.10 தொகுப்புரை 54

இயல் 4 55

ஆய்வுக் கண்டுபிடிப்பு 55

4.1 முன்னுரை 55-56

4.2 ஆய்வு மாதிரி விபரங்கள் 56

4.3 தரவு பகுப்பாய்வு 57

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.3.1 முன்னறித் தேர்வு 57-68

4.4 நடவடிக்கைகள் 68-86

4.5 பின்னறிவுத் தேர்வு 90-93

4.6 முன்னறுவு-பின்னறுவுத் தேர்வு ஒப்பீடு 93-97

4.7 தொகுப்புரை 97

இயல் 5 98

முடிவுரை 98

5.1 முன்னுரை 98

5.2 கருத்துரை 98-99

5.3 முதலாம் படிவ மாணவர்கள் உரக்க வாசிப்புத் திறன் எவ்வாறு உள்ளது? 100-101

5.3.1 எட்கர் டேல் அனுபவக் கூம்பின் கோட்பாட்டின் வழி மாணவர்கள் உரக்க வாசிக்கும் திறனை எப்படி மேம்படுத்தலாம்? 101-103

5.4 தொடர் ஆய்வுக்கான பரிந்துரைகள் 103-104

5.5 முடிவுரை 105

துணைநூற்பட்டியல் 106-109

பின்னிணைப்பு 110-116

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**அட்டவணைப் பட்டியல்**


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆய்விற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் | 39 |
| 2. | மாணவர்களின் எண்ணிக்கை | 57 |
| 3. | முன்னறிவுத் தேர்வின் முடிவுகள் | 59 |
| 4. | உரக்க வாசிப்பில் ஏற்பட்ட சிக்கல்கள் | 62 |
| 5. | பந்தை பகிரு பனுவலை வாசி | 71 |
| 6. | வாசி வாசி உரக்க வாசி | 75 |
| 7. | வாசிப்பு சக்கரம் விளையாட்டு | 78 |
| 8. | பொங்கள் சார்ந்த பனுவலை ஆடியோ வழி வழங்குதல் | 82 |
| 9. | உச்சரிப்பு நடவடிக்கை | 85 |
| 10. | ஐந்து நடவடிக்கைகளின் அடைவுநிலை | 87 |
| 11. | பின்னறிவுத் தேர்வு முடிவுகள் | 91 |
| 12. | பின்னறிவுத் தேர்வின் மதிப்பெண்கள் வரையறை | 92 |
| 13. | முன்னறிவுத் தேர்வு – பின்னறிவுத் தேர்வு அடைவுநிலை | 94 |
| 14. | உரக்க வாசிப்பில் ஏற்பட்ட சிக்கல் | 100 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**வரைபடப் பட்டியல்**



| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | உரக்க வாசிப்பு திறன் | 7 |
| 2. | ஆய்வு வடிவமைப்பு | 33 |
| 3. | ஆய்வு கட்டமைப்பு | 36 |
| 4. | ஆய்வுக் கோட்பாடு | 46 |
| 5. | ஆய்வுக் கோட்பாடு கட்டமைப்பு | 56 |
| 6. | முன்னறிவுத் தேர்வில் மாணவர்களின் அடைவுநிலை | 61 |
| 7. | ஐந்து நடவடிக்கையில் மாணவர்களின் அடைவுநிலை | 89 |



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# இயல் 1

# அறிமுகம்

## 1.0 முன்னுரை

தமிழ்மொழி பாடத்திட்டதில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்று நான்கு அடிப்படையான மொழிதிறன்கள் உள்ளன. அதில் இடைநிலைப்பள்ளி பாடத்திட்டதில் மாணவர்களிடையே வாசிப்பு திறன் முக்கிய பங்காற்றுகிறது. வாசிப்புத் திறன் பிற திறன்களைக் காட்டிலும், மிக அவசியமான திறனாக கருதப்படுகிறது. வாசிப்புத் திறன் தான் ஒரு தனி மனிதனின் அறிவை மேம்படுத்துவதற்கு முக்கியப் பங்காற்றுகிறது. அதாவது, வாசகன் எதை வேண்டுமானாலும் எல்லையில்லாமல் வாசித்துக்கொண்டே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இருக்கலாம். வாசித்தல் என்பது புத்தகத்தில் உள்ள எழுத்துப் படிவத்தை வாசிப்பது மட்டுமின்றி, அந்த எழுத்துப் படிவம் எவ்வித கருத்து அல்லது உணர்ச்சியை உணர்த்துகிறது என்பதை எழுதாளர் என்ன கூறியுள்ளார் என்று அறிந்துகொள்வதே வாசிப்பாகும் (Malek & Heerman, 1992). வாசிப்பு இரண்டு வகைப்படும். அவை உரக்கவாசித்தல், மௌனமாக வாசித்தல் என்பவை ஆகும்.

உரக்க வாசித்தல் என்பது எழுத்துக்களை கண்களால் பார்த்து அதற்கேற்ப அதை வாயால் ஒலி வடிவத்தில் உச்சரித்து சொல்லி பொருளை உணர்த்துபவை ஆகும். இதன் மூலம் மாணவர்கள் தடுமாற்றம் இன்றி விரைவாக படித்ததை சோதிக்க முடியும் மற்றும் மாணவர்களிடையே நிலவி வரும் உச்சரிப்பு பிழைகள் திருத்தப்படுகிறது. Alia Maisarah

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



(2015) என்பவர் மொழி கற்பித்தலிலும் கற்றல் செயல்பாட்டிலிலும் நான்கு முக்கியமான மொழி திறன்களில் உரக்க வாசிப்புத் திறன் ஒன்றாக கருதப்படுகின்றது என்று கூறியுள்ளார். உரக்க வாசிப்பது சொற்களஞ்சியத்தை விரிவுபடுத்தவும், சரியான உச்சரிப்பைக் கற்றுக்கொள்ளவும், இலக்கணத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

இத்தகைய வாசிப்பு பகுதியிலிருந்து ஒரு சிறு பகுதியான உரக்க வாசிப்பு தெரிவு செய்யப்பட்டு, அதனை முதலாம் படிவ மாணவர்களுக்கு 'எட்கர் டேல் அனுபவக் கூம்பு' கோட்பாட்டின் துணைக்கொண்டு மேம்படுத்தலாம் என்ற நோக்கத்துடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இயலில் ஆய்விற்கான அறிமுகம் வழங்கப்பட்டுள்ளது மட்டுமின்றி ஆய்வின் கண்ணோட்டங்களும் விளக்கப்படுள்ளது. அவை, ஆய்வுப் பின்னனி, ஆய்வுச் சீக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு நன்மைகள், ஆய்வு எல்லை, ஆய்வுச் சான்றாதாரம், கலைச்சொற்கள் விளக்கம் ஆகிய துணைத் தலைப்புகள் இவ்வியலில் விவரிக்கப்பட்டுள்ளன.

Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah ptbupsi

## 1.2 ஆய்வுப் பின்னணி

மலேசியாவில் தமிழ்க்கல்வி வரலாறு 19 நூற்றாண்டில் தொடங்கியது. இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து குடியேறிய தமிழ் மக்கள் தோட்டத் தொழிலாளர்களாக வேலைக்கு வந்தனர். அக்காலகட்டத்தில் 1816 ஆம் ஆண்டில் பினாங்கு மாநிலத்தில் 'ரெவரண்ட் ஹாட்சிங்ஸ் என்பவரின் முயற்சியால் பினாங்கு பொதுப்பள்ளி (Penang Free School) தோற்றுவிக்கப்பட்டது. இப்பள்ளியில் 21.10.1816இல் தமிழ்வகுப்பு ஒன்று முதன் முதலாக தொடங்கப்பட்டது. இதுவே மலேசிய நாட்டின் தமிழ்க்கல்வி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது. மேலும், 1912 – ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட தொழிலாளர் சட்டம், தமிழ்பள்ளியின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது. ( சாமிகண்ணு ஜெபமணி, கிங்ஸ்டன் பால் தம்புராஜ், 2018). 7 முதல் 14 வயதில் 10 மாணவர்கள் இருந்ததால் ஒவ்வொரு தோட்டத்திலும் கிராமத்திலும் தனித்தனி பள்ளிகள் அமைக்கப்பட்டது. இதன்வாயிலாக, 1920 ஆம் ஆண்டில் மலேசியாவில் 122 தமிழ்ப்பள்ளிகள் உருவாகப்பட்டது. அன்றைய காலத்தில், மலேசியாவில் தமிழ்கல்வியானது ஒன்று அல்லது இரண்டு மணி நேரமே போதிக்கப்பட்டது.

தொடர்ந்து, 1957-ஆம் ஆண்டு மலேசியா சுதந்திரம் பெற்ற பிறகு, தமிழ் மொழி தேசிய பாடத்திட்டத்தில் ஒரு விருப்பப் பாடமாக தொடர்ந்தது. பின், 2003ஆம் ஆண்டில், ஒன்றாம் ஆண்டு, ஒன்றாம் படிவம், நான்காம் படிவம், ஆறாம் படிவம் மாணவர்கள் அறிவியல், கணிதப் பாடத்தை ஆங்கில மொழியில் மாணவர்கள் படிக்கவேண்டிய சூழல் ஏற்பட்டது. தொடர்ந்து, மாணவர்களுக்கு அறிவியல், கணிதம் ஆங்கிலத்தில் கற்பிக்கும் கொள்கை நீக்கப்படும் என்று டான் ஸ்ரீ முகிதின் யாசின் 2009-ஆம் ஆண்டு அறிவித்தார். பின், 2011-ஆம் ஆண்டு, ஒன்றாம் வகுப்புச் செல்லும் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் அறிவியல், கணிதம் பாடத்தைத் தமிழ்மொழியிலே பயின்றனர் (சாமிகண்ணு ஜெபமணி, கிங்ஸ்டன் பால் தம்புராஜ், 2018). அடுத்து, 2003-ஆம் ஆண்டு, ஆரம்பப்பள்ளி, இடைநிலைப் பள்ளிப் பாடத்திட்டங்கள் மறு ஆய்வு செய்யப்பட்டு, மறுசீரமைக்கப்பட்ட ஆரம்ப பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டமும் மறுசீரமைக்கப்பட்ட இடைநிலைப் பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டமும் அறிமுகம் செய்யப்பட்டன. தொடர்ந்து, 2021-ஆம் ஆண்டு மலேசியாவில் 523 தமிழ்ப்பள்ளிகள் உள்ளன, 120,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயில்கின்றனர். மாணவர்களிடையே தமிழ் மொழி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மற்றும் கலாச்சாரத்தை பாதுகாக்க பல அமைப்புகள் செயல்படுகின்றன. நமது நாட்டில் தமிழ் மொழி கற்பிக்க சவால்கள் இருந்தபோதிலும், தமிழ்கல்வி நிலைத்திருக்கிறது.

மலேசிய நாட்டின் கல்வி கொள்கையும் தேசியக் கலைத்திட்டமுமானது அறிவு, திறன், நெறிமுறை, பண்பு, கலாச்சாரக் கூறுகள், நம்பிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கல்வித்திட்டமாகும். ஆரம்பப்பள்ளியில் மாணவர்கள் பெற்ற தமிழ்மொழியாற்றலை மேலும் மேம்படுத்தும் விதமாகவே அமைந்துள்ளது தேசியக் கலைத்திட்டம். இந்தக் கே.எஸ்.எஸ்.எம் கலைத்திட்டத்தில் நான்கு வகையான மொழித் திறன்கள் இடம்பெற்றுள்ளன. தமிழ்மொழிப் பாடாத்திட்டத்தில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்று வகையான மொழித்திறன்கள் அடங்கியுள்ளன. இந்த நான்கு மொழிதிறன்களும் தேசியக் கலைத்திட்டதில் முக்கிய பங்காற்றுகிறது.

இத்திறன்களில் வாசிப்புத் திறன் முக்கியத் திறன்களில் ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளது. மலேசியா நாட்டின் கல்வி அமைச்சு வாசிப்புத் திறனையும் வழியுறுத்தியே தேசியக் கலைத்திட்டத்தை வடிவமைத்துள்ளது. வாசிப்பு என்றால் வரிவடிவத்துடன் உள்ள எழுத்துக்களைக் கண்ணால் பார்த்து, வாயால் ஒலி எழுப்பி, உச்சரித்துப் பொருள் தெளிவது வாசிப்பாகும் என்பதை வேணுகோபால் (2006) கூறியுள்ளார். தேசியக் காலத்திட்டத்தில் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் வகையிலே உள்ளடக்கத் தரங்கள் அமைந்துள்ளன. மாணவர்களிடையே வாசிப்புத் திறனை மேம்படுத்தும் வகையிலே உள்ளடக்கத் தரங்கள் அமைந்துள்ளன. வாசிப்புத் திறன் இரண்டு வகைகள் உள்ளன். அவை உரக்க வாசிப்பு மற்றும் மௌன வாசிப்பு ஆகும். உரக்க வாசிப்பு என்பது வாய்விட்டு வாசித்தல் ஆகும் மாறாக மௌன வாசிப்பு என்பது வாய்க்குள் வாசித்தல் ஆகும். ஆய்வாளர் இவ்வாய்வை மேற்கொள்வதற்கு வாசிப்புத் திறனிலிருந்து உரக்க வாசிப்பு வகையைத் தேர்ந்தெடுத்துள்ளார். தமிழ் மொழி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பாடத்திட்டதில் வாசிப்புத் திறனில் நான்கு வாசிப்பு உள்ளடக்கத் தரங்கள் இடம்பெற்றுள்ளன. அதிலிருந்து ஆய்வாளர் முதல் உள்ளடக்கத் தரத்தைத் தேர்ந்தெடுத்துள்ளார். வாசிப்பு திறனில் முதல் உள்ளடக்கத் தரம் என்பது மாணவர்களிடையே உரக்க வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கு அமைக்கப்பட்டுள்ளது. அவை சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தற்குறிகளுக்கேற்ப வாசிப்பர் என்பது உள்ளடக்கத் தரமாகும். இதனின் கற்றல் தரம் முதலாம் படிவ மாணவர்கள் அறிவிப்பை, விளம்பரத்தைக், கடிதத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தற்குறிகளுக்கேற்ப வாசிப்பர் ஆகும். உரக்க வாசிப்பு திறனில் உள்ளடங்கிய நான்கு முக்கிய கூறுகளின் அடிப்படையில் இவ்வாய்வு பரிசோதிக்கப்படுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அ. **வேகம்**

- வேகத்தோடு வாசித்தல் என்பது, வாசிக்கும் தகவல்களை எளிதில் புரிந்துகொள்ளும் வகையில், தெளிவாகவும், சலிப்படையாமல் வாசிக்கும் திறனைக் குறிக்கிறது. மேலும், சரியான வேகத்தோடு வாசிப்பதான் மூலம் கவனம் சிதறாமல் வாசிப்பில் முழு கவனத்தையும் செலுத்த முடியும். பின், கேட்பவர்களுக்கு புரிந்துகொள்ள எளிதாக இருக்கும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**ஆ. தொனி**

- தொனியுடன் வாசித்தல் என்பது, வாசிக்கும் உள்ளடக்கத்திற்கு ஏற்றவாறு, உணர்ச்சிகளை வெளிப்படுத்தி, கேட்பவர்களை ஈர்க்கும் வகையில் வாசிக்கும் திறனைக் குறிக்கிறது. ஒவ்வொரு தமிழ் எழுத்துக்கும் வெவ்வேறு விதமான ஓசை கொண்டிருக்கும். மேலும், ஒவ்வொரு சொற்களுக்கும் வெவ்வேறு நயம், சுருதி குறிப்பதே தொனியாக்கும்.

**இ. உச்சரிப்பு**


- உச்சரிப்புடன் வாசித்தல் என்பது ஒரு சொல் அல்லது சொற்றோடரைப் பிழையின்றி வாசித்தல் ஆகும். எந்தவொரு மொழியிலும் வார்த்தைகளுக்கென உதடுகள் குவித்து, வாயின் நடுவில் இருந்து தொண்டையிலிருந்து மற்றும் வயிற்றிலிருந்து உருவாக்கும் ஒலிகளே, உச்சரிப்பு அல்லது பலுக்கல் எனப்படும். ஒரு வார்த்தை பல்வேறு வகைகளில் பல்வேறு பிரிவினரால் உச்சரிக்கப்படுகின்றது. எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்கவில்லையெனில் சொற்களின் பொருள்கள் வேறுபட்டுவிடும். நாம் வாசிக்கும் கருத்தைப் பிறர் தெளிவாக உணர்ந்துகொள்ள நாம் சொற்களில் உள்ள எழுத்துக்களைச் சரியாக உச்சரித்தல் அவசியமாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## ஈ. நிறுத்தகுறிகள்

- சரியான நிறுத்தகுறிகளுக்கு ஏற்ப வாசித்தல் என்பது வாக்கிய அமைப்புகளை புரிந்துகொள்ள நிறுத்தக்குறிகளை சரியாக பயன்படுத்த வேண்டும். மேலும், நிறுத்தக்குறிகளுக்கு ஏற்ப குரலில் மாற்றங்களை செய்ய வேண்டும். சான்றாக, கேள்வி வாக்கியங்களை வாசிக்கும் போது குரலின் முடிவில் மேலே ஏற்ற வேண்டும் மற்றும் அறிக்கை வாக்கியங்களை வாசிக்கும் போது குரலின் முடிவில் கீழே இறக்க வேண்டும். தொடர்ந்து, உணர்ச்சி வாக்கியங்களை வாசிக்கும் போது குரலில் உணர்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டும்.




வரைபடம் 1 : உரக்க வாசிப்பு திறன்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தொடர்ந்து, முதலாம் படிவ மாணவர்களின் உரக்க வாசிக்கும் திறனை மேலும் மேம்படுத்துவதற்கு ஆய்வாளர் ‘எட்கர் டேல் அனுபவக் கூம்பு’ கோட்பாட்டைத் தேர்ந்தெடுத்துள்ளார். எட்கர் டேல் என்பவர் ஒரு அமெரிக்க கல்வியாளர் மற்றும் ஊடக ஆய்வாளர் ஆவார். 1949 ஆம் ஆண்டு, கற்றல் செயல்முறையை விளக்க அவர் "கற்றல் அனுபவ கூம்பு" என்ற கருத்தை முன்மொழிந்தார். இந்த கூம்பு கற்றல் முறைகளை ஆறு நிலைகளாக வகைப்படுத்துகிறது, அவை: நேரடி அனுபவம், செயல்பாட்டு அனுபவம், பார்வை அனுபவம்,ஆடியோ அனுபவம், வாய்மொழி அனுபவம் மற்றும் வாசிப்பு அனுபவம் ஆகும்.

இந்த ஆய்வு மாணவர்களை உரக்க வாசிக்கும் திறனை மேம்படுத்த உதவும்.
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
ஆதலால், இவ்வாய்வை இந்த கோட்பாட்டின் வழி கொண்டு மேற்கொள்வதால் மாணவர்களின் உரக்க வாசிக்கும் திறனை மேம்படுத்த முடியும்.

**1.3 ஆய்வுச் சிக்கல்**

முதலாம் படிவ மாணவர்கள் உரக்க வாசிக்கும் திறனில் நிறைய சிக்கல்கள் மேற்கொள்கின்றனர். இதற்குச் சான்றாக ஆய்வாளர் உரக்க வாசிக்கும் திறனில் மாணவர்கள் மேற்கொள்கின்ற சிக்கல்கள் தொடர்பாக நிறைய ஆய்வுகள் இணைக்கப்பட்டுள்ளது. பரமேஸ்வரி சங்கரன் (2018) என்பவர் இடைநிலைப்பள்ளியில் மாணவர்களால் வாசிப்பு பகுதியை முறையாகவும் ஏற்ற தொனியுடனும் வாசிக்க இயலாததால் தாங்கள் வாசித்ததை உய்த்துணர்வும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இரசிக்கவும் இயலாத நிலையில் இருக்கின்றனர் என்று கூறியுள்ளார். அதுமட்டுமின்றி, இடைநிலைப் பள்ளிகளில் தமிழ்மொழிப் பாடம் ஒரு வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரக் கால அளவில்தான் பள்ளியில் நடத்தப்படுகிறது.இதனால், ஆசிரியர்களால் மாணவர்களின் மீது முழு கவனத்தைச் செலுத்தி உரக்க வாசிப்பை நடத்த முடியவில்லை. தொடர்ந்து, முஹம்மது காலித் மஹ்மூத் சஜித் (2019) என்பவர் இடைநிலைப்பள்ளி மாணவர்கள் குரல் தொனியை மாற்றவோ அல்லது முக்கியமான வார்த்தைகளை வலியுறுத்தவோ சிரமபடுகின்றனர். இது அவர்களின் உரக்க வாசிப்பை புரிந்துகொள்வதை கடினமாகிறது என்று கூறியுள்ளார்.

மாணவர்களுக்கு விளம்பரம், பனுவலில் காணப்படும் சொற்கள் தெரியாததால் அதனை வேகமாக வாசிக்க முடியவில்லை என்று பிரேமா ஜெயந்தி (2015) என்பவர் கூறியுள்ளார். இதனால், மாணவர்களால் சரியான வேகத்துடன் வாசிக்க இயலாமல் போகின்றது. மேலும், ஜெயராமன், சந்திரிகா மற்றும் விஜயா (2013) என்பவர்கள் சொற்களில் ஒலியன்கள் உச்சரிப்புத் திருத்தமாக அமையாததால் மற்றவர்களுக்குத் தெளிவாகக் கருத்து விளங்காமல் குழப்பமே ஏற்படும். ஆதலால், ஒலியன்களை உச்சரிக்கும் போது திருத்தமாகப் பேசப் பயிற்றுதல் வேண்டும் எனக் கூறியுள்ளனர். இன்றைய காலக்கட்டத்தில் இடைநிலைப்பள்ளியில் மாணவர்கள் வாசிக்கும்பொழுது நிறைய சிரமங்களை மேற்கொள்கின்றனர். இந்த சிக்கல், தொடக்கப்பள்ளியிலிருந்து இடைநிலைப்பள்ளிவரை மாணவர்களிடம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. அதில்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


முக்கியச் சிக்கலாகக் காணப்படுவது உரக்க வாசிக்கும் முறையைப் பின்பற்றி வாசிக்காமல் இருப்பதே ஆகும்.

இவ்வாய்வை முதலாம் படிவ மாணவர்கள் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு மற்றும் நிறுத்தற்குறிகளுக்கேற்ப அறிவிப்பு, பனுவல், கடிதத்தை வாசிக்க உறுதுணையாக இருக்கும். உரக்க வாசிப்பில் காணப்படும் வேகம், தொனி, உச்சரிப்பு மற்றும் நிறுத்தற்குறிகள் நான்கு கூறுகளைக் கொண்டு மாணவர்கள் அறிவிப்பு, பனுவல்களை வாசித்தால் மாணவர்களுடைய வாசிப்புத் திறன் அதிகரிக்கும் மற்றும் சிக்கல்களைக் களைய முடியும். ஆதலால், ஆய்வாளர் முதலாம் படிவ மாணவர்களிடையே உரக்க வாசிக்கும் திறனை 'எட்கர் டேல் அனுபவக் கூம்பு' வழி மேம்படுத்தவுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.4 ஆய்வு நோக்கம்:

இந்த ஆய்வு இரண்டு நோக்கங்களை அடைவதைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது, அவை:

I. முதலாம் படிவ மாணவர்களின் உரக்க வாசிக்கும் திறனில் ஏற்படும் சிக்கல்களைக் கண்டறிதல்.

II. முதலாம் படிவ மாணவர்களின் உரக்க வாசிக்கும் திறனில் எதிர்நோக்கும் சிக்கலை எட்கர் டேல் கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.5 ஆய்வு வினா:

ஆய்வு நோக்கத்தைச் சார்ந்த இரண்டு ஆய்வு வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த களவாய்வு மேற்கொள்வதற்கான இரண்டு வினாக்கள் பின்வருமாறு, அவை:

I. முதலாம் படிவ மாணவர்களின் உரக்க வாசிக்கும் திறன் எவ்வாறு உள்ளது?

II. எட்கர் டேல் அனுபவக் கூம்பின் கோட்பாட்டின் வழி மாணவர்கள் உரக்க வாசிக்கும் திறனை எப்படி மேம்படுத்துதலாம்?

### 1.6 ஆய்வு நன்மைகள்

இந்த ஆய்வின் கண்டுப்பிடிப்பானதுப் பல தரப்பினருக்கு மிகவும் உதவியாகவும் வழிக்காட்டியாகவும் அமையும். மாணவர்களுக்கு மட்டுமல்லாது ஆசிரியர்கள் மற்றும் கல்வி அமைச்சிற்க்கும் இந்த ஆய்வின் கண்டுப்பிடிப்பானது துணைப் புரியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

#### 1.6.1 மாணவர்கள்

இந்த ஆய்வின் கண்டுபிடிப்பானது இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்குப் பெரும் பங்காற்றும். அதாவது, மாணவர்களிடையே உரக்க வாசிக்கும் திறனை வளர்க்க முடியும். உரக்க வாசிக்கும் திறனை வளர்ப்பதால் மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் எத்தகைய அறிவிப்பு, கடிதம், பனுவலாக இருந்தாலும் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு மற்றும் நிறுத்தகுறிகளுக்கேற்ப வாசிக்க முடியும். தொடர்ந்து, மாணவர்கள் அறிவிப்பு, கடிதம். பனுவல்கள் உரக்க வாசிக்கும் போது எந்த இடத்தில் சிரமத்தை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


எதிர்நோக்குகின்றனர் என்பதை அறிய முடியும். உரக்க வாசிக்கும் திறனில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிந்தால் தொடக்கத்திலேயே களைய முடியும். மாணவர்கள் சிக்கல்களைக் கண்டறிந்தவுடன் இந்த ஆய்வில் கொடுக்கப்படும் தீர்வுகளின் வழி உரக்க வாசிக்கும் திறனை மேம்படுத்த உதவும். இடைநிலைப்பள்ளியில் மாணவர்கள் அறிவிப்பு, பனுவல், கடிதம் போன்றவற்றை உரக்க வாசிக்கும் போது சரியான உச்சரிப்புடனும் ஏற்றதாழ்வுடனும் ஒலி வேறுபாட்டுடனும் வாசிப்பர். அப்படி வாசிக்கும் போது வாசித்தவற்றின் பொருள் உணர்ந்து ஏற்ற இடங்களில் நிறுத்தி வாக்கியங்களின் வகைக்கேற்ப மாணவர்கள் குரலில் ஏற்ற தாழ்வுகளைக் காட்டி தொனியுடன் வாசிக்க இயலும். உரக்க வாசிக்கும் திறன் எவ்வளவு முக்கியம் என்பதை மாணவர்கள் அறிந்து கொள்ள இயலும். இதன்வழி, மாணவர்களிடையே ஏற்படுகின்ற உரக்க வாசிக்கும் சிக்கள்களைக் களைய முடியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.6.2 ஆசிரியர்கள்

இவ்வாய்வானது ஆசிரியர்களுக்கும் பெரிதளவில் உதவியாக இருக்கும். அதாவது மாணவர்களிடையே உரக்க வாசிக்கும் திறனைச் சிரமமின்றி வளர வைக்க துணைப்புரியும். உரக்க வாசித்தலில் இடைநிலைப்பள்ளி மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களையும் அவற்றின் காரணங்களையும் அவற்றைக் களையும் முறைகளையும் ஆசிரியர்கள் அறிந்து கொள்ள இயலும். ஆகவே, இந்த ஆய்வில் குறிப்பிடும் சிக்கல் களைவதற்கான தீர்வுகளைக் கொண்டு ஆசிரியர்கள் உரக்க வாசிக்கும் திறனை மாணவர்களிடையே மேம்படுத்த முடியும். இதனால், ஆசிரியர்கள் வகுப்பில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மாணவர்களுக்கு உரக்க வாசிப்பை சிறப்பாகவும் முறையாகவும் வழிநடத்த முடியும். மாணவர்களின் அடைவு நிலையும் உயர் இவ்வாய்வு முக்கிய பங்காற்றும்.

### 1.6.3 கல்வி அமைச்சு

மலேசியா நாட்டின் கல்வி அமைச்சுக்கு இவ்வாய்வு நன்மை அடையும் காரணம் உரக்க வாசிக்கும் திறனில் காணப்படும் சிக்கல்களைக் களையவும் தீர்வுகளைக் கண்டறியவும் உதவும். அதாவது, இந்த ஆய்வின் வழி மலேசியா கல்வி அமைச்சு இடைநிலைப்பள்ளி மாணவர்கள் உரக்க வாசிப்புத் திறனில் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிவது மட்டுமின்றி, அதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடித்து கையாளவும் முடியும். இந்த ஆய்வின் மூலம் இடைநிலைப்பள்ளி மாணவர்களின் வாசிப்புத் திறனின் அடைவு நிலையை அதிகரிக்க முடியும். இதன்வழி, மலேசியா நாட்டின் கல்வி அடைவு நிலை உயர துணைப்புரியும்.

## 1.7 ஆய்வு எல்லை

ஆய்வாளர் இவ்வாய்வினை சில எல்லைக் கூறுகளின் அடிப்படையில் செயல்படுத்தியுள்ளனர். இவ்வாய்வில் இரண்டு வகையான ஆய்வுப் பொருள் உள்ளன. முதல் ஆய்வுப் பொருள் உரக்க வாசிப்பு. உரக்க வாசிப்புக் கீழ் வேகம், தொனி, உச்சரிப்பு, நிறுத்தற்குறி என்று உரக்க வாசிப்புக் கூறுகள் உள்ளன. இரண்டாவது ஆய்வுப் பொருள் முதலாம் படிவம் ஆகும். இவ்வாய்வில் ‘எட்கர் டேல் அனுபவக் கூம்பு’ என்னும் கோட்பாடு இணைக்கப்பட்டுள்ளது. ஆய்வு வடிவமைப்பு களவாய்வு ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இவ்வாய்வில் ஆய்வாளர் ஓர் ஆய்வு அணுகுமுறையைப் பயன்படுத்தியுள்ளார். அதாவது பண்புசார் ஆகும்.

இவ்வாய்வு கெடா மாநிலத்திலுள்ள கூலிம் வட்டாரத்தில் நிகழ்த்தப்படும். கூலிம் வட்டாரதிலுள்ள ஒரு பள்ளி இவ்வாய்விற்கு உட்படுத்தப்படும். இவ்வாய்வு முதலாம் படிவ மாணவர்களிடையே உரக்க வாசிக்கும் திறன் எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறிவதற்கு மேற்கொள்ளப்படும். இவ்வாய்விற்கு இரண்டு தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களும் 50 மாணவர்களும் உட்படுத்தப்படுவார்கள்.

### 1.8 ஆய்வுச் சான்றாதாரங்கள்

ஓர் ஆய்வை மேற்கொள்வதற்கு சான்றாதாரங்கள் மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஆய்வு சான்றாதாரங்கள் இரண்டு வகைப்படும். அவை முதன்மைச் சான்றாதாரம் மற்றும் துணைமைச் சான்றாதாரம் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

#### 1.8.1 முதன்மைச் சான்றாதாரம்

முதன்மைச் சான்றாதரம் என்பது ஆய்விற்கு முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது. இவ்வாய்வில் முதன்மை சான்றாதாரமாக விளங்கியது, மதிப்பீட்டுத்தாள், நேர்காணல், பாடத்திட்டத்தில் வாசிப்பு பனுவல், தேர்வு ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.8.2 துணைமைச் சான்றாதாரங்கள்

இவ்வாய்வில் துணைமைச் சான்றாதாரங்களாக விளங்கியது வாசிப்புத் திறன் தொடர்பான ஆய்விதழ்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள், நூல்கள், இலக்கணம் போன்றவை ஆகும்.

## 1.9 கலைச்சொல் விளக்கம்

இவ்வாய்வின் தலைப்பானது முதலாம் படிவ மாணவர்களின் உரக்க வாசிக்கும் திறனை 'எட்கர் டேல் அனுபவக் கூம்பின்' வழி மேம்படுத்துதல் என்பதாகும். இத்தலைப்பில் காணப்படும் கலைச்சொற்களானது உரக்க வாசிப்பு மற்றும் எட்கர் டேல் அனுபவக் கூம்பு ஆகும். இக்கலைச் சொற்களை விளக்கினாலே இவ்வாய்வு எந்த நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது தெளிவாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.1 உரக்க வாசிப்பு

உரக்க வாசித்தல் என்பது சொற்களைக் கண்களால் பார்த்து அதற்கேற்ப அதை வாயால் ஒலி வடிவத்தில் உச்சரித்து சொல்லி பொருளை உணர்த்துபவை ஆகும். இதன் மூலம் இடைநிலைப்பள்ளி மாணவர்கள் தடுமாற்றம் இன்றி விரைவாக படித்ததை சோதிக்க முடியும். ஆகவே, மாணவர்களிடையே நிலவி வரும் உச்சரிப்பு பிழைகள் திருத்தப்படுகிறது. Smith (1978) என்பவர் மாணவர்கள் வாசிக்கும் போது சொற்களைச் சரியாக உச்சரிக்கவும் தெளிவாகக் கவனித்து வாசிக்க வேண்டும். வாசித்ததை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் மற்றும் ஒலி வேறுபாடுயுடன் வாசிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

### 1.9.2 எட்கர் டேல் அனுபவக் கூம்பு

எட்கர் டேல் என்பவர் ஒரு அமெரிக்க கல்வியாளராகவும் ஊடக ஆய்வாளர் ஆவார். 1949 ஆம் ஆண்டு, எட்கர் டேல் அவர் "கற்றல் அனுபவங்களின் கூம்பு" என்ற கருத்தைக் கொண்டுவந்தவர். இந்தக் கூம்பு பல்வேறு வகையான கற்றல் அனுபவங்களை படிநிலை வரிசையில் வகைப்படுத்துகிறது, அவை மிகவும் செயலற்ற முறையிலிருந்து மிகவும் செயல்பாட்டு முறைகள் வரை அமைந்துள்ளன. இந்த அனுபவக் கூம்பு மொத்தம் ஆறு படிநிலைகள் இருக்கின்றது. அவை நேரடி அனுபவம்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

செயல்பாட்டு அனுபவம், பார்வை அனுபவம், ஒலி அனுபவம், வாய்வழி அனுபவம், வாசிப்பு அனுபவம் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.10 தொகுப்புரை

இவ்வியலில் ஆய்வாளர் ஆய்வின் அறிமுகத்தைத் தெளிவாக விளக்கியுள்ளார். மேலும், இவ்வாய்வில் மூன்று ஆய்வு நோக்கத்தையும், மூன்று ஆய்வு வினாவையும், மூன்று ஆய்வுச் சிக்களையும் விளக்கியுள்ளார். தொடந்து, இவ்வாய்வில், ஆய்வாளர் கெடா மாநிலத்தில் கூலிம் கெடா தாமான் கெனாரி இடைநிலைப்பள்ளியில் பயிலும் முதலாம் படிவ மாணவர்களை ஆய்வாளர் இவ்வாய்விற்கு உட்படுத்தியுள்ளார். இறுதியாக, 'உரக்க வாசிப்பு திறன்', 'எட்கர் டேல் அனுபவக் கூம்பு கோட்பாடு' எனும் கலைச்சொல்லையும் இந்த ஆய்வில் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi